
**தமிழ் மொழி மற்றும் இலக்கியத்தின் சமகாலத்தன்மை**
**மலர் 4 இதழ் 1, 2023**
**ராமச்சந்திர கல்வி மற்றும் விளையாட்டு அறக்கட்டளை**
**பதிப்பகம் பன்னாட்டுத்தரப்புத்தக எண்: 978819 4845959**
**இணையதளம்: https://restpublisher.com/book-series/ctll/**
**DOI: https://doi.org/10.46632/ctll/4/1/1**



# "தமிழ் வளர்ச்சியில் பாரதிதாசனின் மொழிச்சிந்தனைகள்"

**டி. அங்காளம்மாள்**
*தூய இருதய கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பேரணி , விழுப்புரம் , தமிழ்நாடு, இந்தியா.*
மின்னஞ்சல்: angumars02@gmail.com

## 1. முன்னுரை

பாரதிதாசனுடைய மொழிக் கொள்கையில் இரண்டு விதமான போக்குகள்இருப்பதைக் காணமுடிகிறது. இதற்கு முக்கியக்காரணமாக அமைந்தது திராவிட இயக்கமே எனலாம். திராவிட இயக்கத்தில் தன்னை முழமையாக ஈடுபடுத்திக்கொண்டபிறகு இவருடைய மொழிக்கொள்கையில் மாற்றம் உண்டாகலாயிற்று இளம்வயதில் இந்திய தேசியசாப்புக் கவிஞராகவும். சமயச் சார்பாளராகவும்விளங்கிய பாரதிதாசன் சுயமரியாதை இயக்கத் தொடர்பால் பகுத்தறிவுக் கவிஞரானார்..

## 2. தமிழ்மொழியும் இலக்கியமும்

பாரதிதாசனின் மொழி குறித்த கவிதைகளும், கருத்துக்களும்பண்பாட்டு அரசியல் சார்ந்தவை தான் எழுதியகவிதைகள், கட்டுரைகள், ஆகியவற்றில் தமிழ், சமஸ்கிருதம், இந்தி, ஆங்கிலம் ஆகிய மொழிகள் குறித்து விரிவான அளவிலும்பிரெஞ்சு குறித்து குறைவான அளவிலும் குறிப்பிட்டுள்ளார்கள். தன் தாய்மொழியான தமிழை மிகப்பழமை வாய்ந்தது. அம்மொழி உலகமொழிக்களுக்கெல்லாம் பெற்ற தாயாகவும், வளர்ப்புத் தாயாகவும், இருந்து வந்துள்ளது எனத் தமிழின் தொன்மையைப்பற்றி மிக ஏற்றத்தோடு பாடுகிறார். தமிழின் தொன்மையை விளக்குகிறார் மேலும், "தமிழ் மொழி இங்கு வந்து புகுந்த எதிரிகள் பலராலும் மறைக்கப்பட்டுவிட்டதோ என்றநிலையிலும்மறையாது வாழும்மொழி- தமிழ்மொழி என்று தமிழின் தன்மையை விளக்குகிறார். தமிழ்மொழியில் எழுதபபட்டுள்ள இலக்கியம் தமிழகத்துக்கு மட்டுமல்லாது உலகஇருளைப்போக்குவதற்காகவே தமிழ்மொழி பிறந்தது என்கிறார் பாரதிதாசன் தமிழ்மொழியின்மேலுள்ள பற்றளினால் இலக்கியத்தை உயிராகவும், உணவாகவும் தன் படைப்புகளில்வெளியிட்டார்.

## 3. பாரதிதாசனின் மொழிச்சிந்தனைகள்

பாரதிதாசனின் மொழிச்சிந்தனை என்பது தமிழ்மொழி, தமிழ்இனம், தமிழ்நாடு, மொழிஅடையாளம், தாழ்வு மனப்பான்மையைக் களைதல், சமூதாய ஏற்றத்தாழ்வுகள், மூடநம்பிக்கை களைதல் போன்றவற்றையே அடிப்படையாகக் கொண்டதாகும். பாரதிதாசன் அவரது படைப்புகளில் சமுதாயத்தின் பல்வேறு செயல்பாடுகளை நிறைவேற்றுவதற்கு அனைத்து நிலைகளிலும். தமிழ்மொழியே பயன்படுத்த வேண்டும்என்று தன் தாய்மொழியாம் தமிழை வளர்த்தார்.

பதிப்புரிமை: ராமச்சந்திர கல்வி மற்றும் விளையாட்டு அறக்கட்டளை பதிப்பகம்

## 4. தாய்மொழிப்பற்றும் மொழிப்பேணலும்

புரட்சிக்கவிஞர் பாரதிதாசனின் படைப்புகளில் பொதுவான ஒரு கூறாகக்காணப்படுவது தமிழ்மொழிப்பற்றும் மொழிப்பேணலமேயாகும். தமிழ்மொழிப்பற்றி அவர் குறிப்பிடுகின்ற போதெல்லாம் தாய்மொழி பற்றிய எண்ணம்மேலோங்கியிருப்பதை காணமுடிகிறத. தமிழ்மொழியினுடைய சிறப்புக்கூறுகளையும்அதன் தொன்மத்தையும் அவர்கவிதைகளில் ஆங்காங்கே சுட்டிக்காட்டியுள்ளார்.

## 5. அகராதியியல் சிந்தனைகள்

தமிழ்மொழிக்காப்பு இயக்கத்தில் பிற்காலத்தில் உணர்வுப்பூர்வமான மொழிப்போராளியாகப் பங்குகொண்ட பாரதிதாசன் தன்சிறுவயதிலேயே தமிழ்வளர்ச்சி குறித்த ஆக்கபூர்வமான சிந்தனையுடையவராக விளங்கினார். தமிழில்உள்ள மரபு சார்ந்த அகராதி வடிவமான நிகண்டுகளைப் புதுபிக்க வேண்டும் என்று போராடினார். இக்கருத்து தமிழைப் பற்றிய பாரதிதாசனின்வளர்ச்சி சிந்தனையின் வெளிப்பாடு.

## 6. தமிழ்வளர்ச்சிக்கு அமைப்பு தேவை

சமஸ்கிருத மொழியின் வளர்ச்சிக்காக 1951 ஆம் ஆண்டு “சமஸ்கிருத விசுவபரிஷத் என்ற அமைப்பு தொடங்கப்பட்டது. இந்தஅமைப்பில் டாக்டர்இராஜேந்திரபிரசாத் உள்ளிட்ட பல முக்கிய பதவிவகித்துவந்தார்கள். இந்த அமைப்பு சோமநாதர் அறக்கட்டளையுடன் இணைந்து செயல்படும் என அறிவிக்கப்பட்டது. பேச்சுமொழியாக இல்லாத சமஸ்கிருதத்துக்கே அமைப்பு உருவாக்கத்திட்டமிடும் போது தொன்மையான தமிழுக்கு அமைப்புகள் உருவாக்க முயற்சிகள்மேற்கொள்ளப்படவில்லை என வருந்திய பாரதிதாசன்அந்த அமைப்புக்கு மாற்றாக அக்கால சட்டத்தில் புகழ்பெற்று விளங்கிய தமிழர்களைக் கொண்டு தமிழ்வளர்ச்சிக்கான அமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என கருத்துதெரிவித்தார். “எந்தத்தொழிலில் ஈடுபட்டிருந்தாலும் அவர்கள் தம்மொழி நூல்களை ஆராய்வதில்தவறில்லை! என பிற துறை அறிஞர்கள் தமிழ்வளர்ச்சிக்கான பணிகளில் ஈடுபடவேண்டும் என வற்புறத்துகிறார்.

## 7. பாரதிதாசனின் அரசியல் பின்புலமும், சமூகப் பண்பாட்டு பின்புலமும்

பாரதிதாசனின் மொழிச் சிந்தனையானது அவரது அரசியல்இயக்க ஈடுபாட்டிற்குத் தக்கவாறு மாற்றம் பெற்று விளங்குகிறது. குறிப்பாகத் திராவிட இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொள்வதற்கு முன்பாக அவரது சிந்தனை “மொழி-நாடு-தேசியம்”எனலாம். ஆனால் திராவிட இயக்கத்தில்தன்னை முழுமையாக இணைத்துக் கொண்ட பிறகு மாநிலவியல் குறுகிய நோக்கம் மொழித்தூய்மை. பிற இனங்களையும், மொழிகளையும் வெறுத்தல்என்று ஆகிவிட்டது. இவரது மொழிச் சிந்தனை இவ்வாறு குறுகியதற்குக் காரணம் தமிழ்மொழிக்கும் தமிழர்களுக்கம், ஆசிரியர்களால் இழைக்கப்பட்ட அநீதியேயாகும். எனவே, இவரது மொழிச்சிந்தனையைத் தீரமானிக்கக்கூடிய ஒரு சமூகக்கூறாக அவரது காலத்தில்தமிழினத்திற்கு இழைக்கப்பட்ட அநீதி என்ற சமூதாயக் காரணியாகும். எனவே தான், மொழித்தூய்மை பற்றியும் வடமொழி மேலாதிக்கம் பற்றியும் அவரது படைப்புகளில் காண முடிகிறது. இங்ஙனம் அமைந்துள்ள மொழி, இனம் என்னும் கருத்தியல்களை தம்பாடல்களில் அமைத்துப்பாடிய பெருங்கவிஞர் பாவேந்தர்பாரதிதாசன் ஆவார். புதுவை தந்த பாரதிதாசன் ஒரு புரட்சி புயல். சீரத்திருத்தச் செம்மல் இருண்டு கிடந்த இருபதாம்நூற்றாண்டுக் கவிதைக் குப்புத்தொளி ஊட்டியவர் அவர்தம் பாட்ல்களில் மொழிஉணர்வு, தமிழின் உணர்வு, நாட்டுணர்வு மேலோங்கி நிற்பதைக் காணமுடிகிறத. தமிழ்இன்பத்தமிழ் எங்கள் உயிருக்கு நேர், என்றார் பாவேந்தர். அவருக்குத் தமிழ்தான்மூச்சுதமிழின்றித் தமிழனில்லை என்னும் கருத்தக் கொண்டவர் பாவேந்தர். உடலை வளர்ச்சிப் பல பொருட்கள் உலகல்இருப்பினும்

பதிப்புரிமை: ராமச்சந்திர கல்வி மற்றும் விளையாட்டு அறக்கட்டளை பதிப்பகம்

உயிரையும், உணர்வையும்வளர்ப்பது தமிழின்றி வேறில்லை என் உறுதியாய்ச் சுட்டிக்காட்டியவர் பாவேந்தர். தமிழுணர்ச்சியை வளர்ப்பதற்குப் புரட்சிக்கவிஞர்எண்ணற்ற கவிதைகளை வகைவகையாக வடித்துக்கொடுத்தார். அவர் தம்பாடலின் ஒவ்வொரு வரியிலும் ஓர்அரிய செய்தி உணர்ச்சி, வீச்சு இருப்பதைக் காணமுடியும் தமிழ் அருளை வளர்த்தால் மட்டும்போதுமா? பொருளையும் வளர்க்க வேண்டும் என் விழைந்ததால் பாரதியாரின்வழியினின்றும் மாறினார் புரட்சிக்கவிஞர் அறிவியக்கம் ஒன்றுதான்உற்ற வழி என ஓர்ந்தார். பகுத்தறிவு இயக்கப் பணிகளுக்கத் தம்மை ஆட்படுத்திக் கொண்டார். மனிதனைச் சூழ்ந்துள்ள தீமைகளை தீமையான மூடநம்பிக்கை. எண்ணம், சொல், செயல். எல்லாம் பகத்தறிவின் அடிப்படையில் அமையவேண்டும். அறிவுப்புரட்சி ஒன்றே பகுத்தறிவாளர் தம்முயற்சி அறிவுப் புரட்சிக்குச் சிறந்த கரு விதமிழியக்கமே என முடிவு செய்தார் புரட்சிக் கவிஞர்.

> "தமிழறியான் தமிழர்நிலை தமிழர்நெறி
> தமிழர்களின்தேவை,
> வாழ்வுதமை யறிதல் உண்டே"

எனக் கேள்வி எழப்பி விளக்குகிறார் புரட்சிக்கவிஞர். தமிழைப் பற்றி கூறும் போது,

> "உடலியக்கும் நல்லுயிர்க்கு உயிரியக்கும் நுண்கலை"

"பண்டுவந்த செழும் பொருளே"தமிழ் எங்கள் மூச்சாம்"தமிழ் எங்கள்உயிருக்கு நேர், தமிழை என்னுயிர் என்பேன், "தமிழே நீ என்றன் ஆவி, என்றெல்லாம் சாற்றினார். தமிழை உயர்த்தினால் தமிழர் உயிர்வர் எனக்கருதினர். சாதியினாலும், மதத்தாலும், சமயங்களாலும், பொருளாதார ஏற்றத்தாழ்வுகளாலும், பிளவுண்டு கிடக்கும்தமிழ்ச் சமுதாயத்தை ஒன்றிணைக்கும் ஒரே சக்தி தமிழ்உணர்வே என்பதை உணர்ந்து அதனை வலியுறுத்தியவர் பாவேந்தர். நிலையான மக்கள் அமைப்பு, பொதுமொழி, வரலாற்றுச் சிறப்புமிக்க விழுமியப்பண்புகூறுகள். தமிழ்நாடு புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் தம்பாடல்களில் உள்ளடக்கமாய்தமிழ்மொழி, தமிழினம் தமிழ்நாடு இவற்றையே முதன்மை படுத்தியுள்ளதைக்காணமுடிகிறது. மொழி வளர்ந்தால் இனம் வளரும், இனம் வளர்ந்தால்நாடு நிலை பெறஇயலும் என்பதை உணர்ந்து பாடியவர் புரட்சி கவிஞர் தமிழரை ஆரியத்துக்கும்அயல் பகைக்கும் எதிராக ஒன்று திரட்ட, தமிழ் மொழி என்னும் ஆயுதத்தைச்சிறப்பாக ஒளிரச் செய்தவர் பாவேந்தர் ஆற்றுக்குக் கலைகள் காவலாக அமைவது போல தமிழ்இனத்துக்கும் தமிழ்நாட்டுக்கும் தமிழ்மொழியே காவலாக அமையும்என்பதை உணர்ந்து தமிழுக்கும், தமிழ்மொழி வளர்ச்சிக்கும் பாடுபட்டவர் புரட்சிகவிஞர் ஆவார்.

## 8. மொழியும் தேசியமும்

பாரதிதாசன் நோக்கில் தேசியம் என்பது தமிழினம் என்பதையும், நாடு என்பது தமிழ்நாடு என்பதையும், மொழி என்பது தமிழ்மொழி என்பதையும், குறிக்கும். எனவே தான் அவர்நாடு- மொழி சமூகம் என்பதைத்தமிழ் மொழி மூலமாக அடையாளப் படுத்துகிறார். ஆகவே தான் தனித்தமிழ், தமிழ்நாடு, தமிழ்இனம், தமிழ்ப்பண்பாடு, திராவிடர்கள், நற்றமிழர், தமிழகம் என்றெல்லாம் தம்படைப்புகள் மூலம் பேசியுள்ளார்.

## 9. தமிழ் வளர்ச்சிக் கழகம்

பாரதிதாசன் அவர்கள் தமிழ் வளர்ச்சிக்கென 1958-ம்ஆண்டு தமிழ்வளர்ச்சிக்கழகம் என்ற அமைப்புத் தொடங்கப்பட்டது. இவ்வமைப்பின் மூலம்பலநோக்கங்களை முன் வைத்தார்.

1. கடல் கொண்ட குமரி நாடு முதல் இமயம் வரைக்கும் முதன்மொழி தமிழ்மொழியாக அமையவேண்டும்.

2. தொல்காப்பியம் முதல் திருக்குறள் வரைக்கும் உள்ள தமிழ்பெருநூற்கட்குள்ள உரைகள் பெரும்பாலும உரையாசிரியர் மதம்பற்றியவை அவற்றை படிந்து முடிவாக கொள்ள இயலாது.
3. தமிழர் நூற் கொள்கை தமிழரல்லாதவர் நூற்கொள்கை என இருபெரும்பிரிவுள்ள கொள்கைகளை வைத்தே தமிழர்நூல்களின் உரை ஆராயப்பட வேண்டும். –போன்ற நோக்கங்களை முன் வைத்தார்.

## 10. முடிவுரை

பாரதிதாசனின் மொழிவளர்ச்சி மற்றும் மொழிச்சிந்தனை என்பத தமிழ்மொழியையும் அதன் வளர்ச்சியையும் அடிப்படையாகக் கொண்டதேயாகும். மேலும்இவரது மொழிச்சிந்தனை இரட்டைத்தன்மை கொண்டதாகவே உள்ளது. குறிப்பாக பாரதியாரோட இணைந்திருந்த பொது ஒரவகையான சிந்தனையும். பிறகு தந்தை பெரியாரொடு இணைத்துக்கொண்ட போது மற்றொரு விதமான மொழிச் சிந்தனையயுமெ கொண்டிருந்தார். மேலும், தமிழ் மொழிப் பயன்பாட்டில்பிறமொழி குறுக்கியவதையோ அல்லது அதன் தாக்கத்தையோ அவர் ஒரு போதும்ஆதரிக்கவில்லை தேசியம் என்பதில் பிறபடைப்பாளர்கள் கொண்டிருந்தகரத்துக்களில் இருந்து முற்றிலும்வேறுபட்ட ஒரு தனி நிலைப்பாட்டையே கொண்டிருந்ததால் தமிழ், தமிழர்உரிமை தமிழ்நாடு குறித்த நிலைப்பாடுகளின் உணர்வுபூர்வமாகச் செயல்பட்ட வந்த பாரதிதாசன் தமிழியல், பயிற்றுமொழி, கலைச்சொல்லாக்கம். எழுத்துச் சீர்திருத்தம்ஆகிய தமிழ் வளர்ச்சி குறித்த செயல்பாடுகளில்தெளிவான அறிவார்ந்த பார்வை கொண்டிருந்தார்.

## அடிக்குறிப்பு


[1]. Kandasamy, Silllalee. "பாரதிதாசனின் தலைமைத்துவப் பண்புகள்.(Leadership Characteristics of Bharathidasan)." *Journal of Tamil Peraivu (தமிழ்ப் பேராய்வு ஆய்விதழ்)* 3, no. 1 (2016): 35-â.

[2]. Reddy, T. Sanjeevi, and E. Ramganesh. "தமிழ் வளர்க்கும் முயற்சியில் ஓர் ஆய்வு: A study in an attempt to develop Tamil." *Journal of Valartamil* 2, no. 2 (2021): 132-144.

[3]. Thuriyananantham, K. "திரைவானில் பாவேந்தர்.(Paventar in the Cinema World)." *Journal of Tamil Peraivu (தமிழ்ப் பேராய்வு ஆய்விதழ்)* 3, no. 1 (2016): 49-53.

[4]. Agilan, Dhilip Kumar, Kingston Pal Thamburaj, and Thevika Agilan. "பாரதிதாசன் கவிதைகளில் காணப்படும் சமுதாயச் சிந்தனைகளும் தற்காலச் சூழல்களும்: Social Thinking in Barathidasan Poems and Related Current Issues." *Journal of Valartamil* 3, no. 2 (2022): 8-22.

[5]. Rajam, T., and T. Pachaiyamma. "பாரதிதாசன் நாடகங்களில் பெண் பாத்திரங்கள்: Female Characters in Bharathidasan's Plays." *Journal of Tamil Culture and Literature* 2, no. 3 (2023): 1-9


பதிப்புரிமை: ராமச்சந்திர கல்வி மற்றும் விளையாட்டு அறக்கட்டளை பதிப்பகம்